## அக்டோபர் - 10

**"பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே." - கொலோ 3 : 9,10.**

நம்முடைய மனதில், நமது சித்தத்தில் மாத்திரம் பழைய காரியங்கள் அழிந்துபோய் எல்லாக் காரியங்களும் புதிதாக இருக்கின்றன. சாவுக்கேதுவான இது சாவாமையைத் தரித்துக் கொள்ளும் போது, அழிவுள்ள இது அழியாமையில் எழுப்பப்படும்போது, அதாவது மகிமையிலும், வல்லமையிலும், ஆவியின் ஜீவியாக எழுப்பப்படும்போது, வாஸ்தவமாகவே இந்த மாறுதல் நிறைவேற்றப்படும். ஆனால் இடையில், நீதிமான்களின் உயிர்தெழுதலில் ஒரு பங்கைப்பெற பாத்திரராவதற்கு, நமது மனதின் இஷ்டத்தை, கர்த்தர் நாம் நாட விரும்புகிறதெல்லாம் நம்முடைய ஊக்கமான ஆசையாக இருக்கிறதென்பதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டியிருக்கிறது. நம்முடைய இருதயத்தின் மேலும், நமது எண்ணங்களின் மேலும், ஒரு கண்டிப்பான மேற்பார்வையை செலுத்துவதை விட, வேறு எந்த வழியிலும் இதை நன்றாகக் கர்த்தருக்கும் நமக்கும் மெய்ப்பித்துக்காட்டவோ அல்லது முன்னைவிட அதிக உதவியாக இருக்க நிரூபிக்கவோ முடியாது. **- Z '04, 25 (R 3304)**

தன் சார்பாகவும், உலகின் சார்பாகவும் மனுஷீக சித்தத்தைக் கைவிடுதல் என்ற அர்த்தத்தில், தேவனுடைய ஜனங்கள் பழைய மனுஷனை களைந்து போட்டிருக்கிறார்கள். மனுஷீக சம்பந்தப்பட்டமட்டில்லாமல், ஆவிக்குரிய சம்பந்தத்திலும் தேவனுடைய சித்தத்தைத் தங்களுடைய சொந்தமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற அர்த்தத்தில், புதிய மனுஷனை அவர்கள் தரித்துக் கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய சாயல், குணம் அவர்களில் பூரணப்படும் வரை, ஒரு சற்றுக்குறைந்த ஒரு மகிமையிலிருந்து அது நெருங்கிய ஒற்றுமையின் மகிமைக்கு அவர்கள் மாற்றப்படுகிற போது, தேவனுடைய சாயல் அவர்களில் ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்படுகிறது. ஜீவியத்தின் அனுபவங்களுக்கு மத்தியில், நன்மையையும், உண்மையான இருதயங்களில் தேவனுடைய வார்த்தை புரிந்து கொள்கிற விதமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவைகளினால் அது உண்மையாகவே அப்பியாசிக்கப்படுகிறதினால், இந்த மாறுதல் செய்யப்படுகிறது. **- P '35, 131.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**எபே 2:10; 4:22,24,25; ரோம 6:4,6,13,14; 12:2; எசே 36:26; 2கொரி 3:18; 4:6; 5:17; சங் 51:10; 1பேது 1:15,16; கலா 6:15; தீத் 2:11,12; ஆதி 1:27.**

**கோபுர வாசிப்பு : Z '15, 147 (R 5685).**

**வினாக்கள் : பழைய மனிதனோடும், புதிய மனிதனோடும் இந்த வாரம் ஏற்பட்ட அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவைகளின் பதில் என்ன?**